07.03.2025

OS No: 567/2019

வா.சா.2 திரு. மணி, த/பெ. சங்கையா

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது சொந்த ஊர் தேவனிபட்டி கிராமம் என்றால் சரிதான். எனது ஊரிலிருந்து தாவா சொத்துள்ள இடம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் நேர் பாதையில் சென்றால் 5 கி.மீ தூரமும், குறுக்கு பாதையில் சென்றால் 3 கி.மீ தூரமும் இருக்கும். தாவா சொத்தைப் பற்றி தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 79 செண்ட் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் 1, 2 பிரதிவாதிகளின் தாயாரான குஞ்சரம்மாளுக்கு பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி 1, 2 பிரதிவாதிகள் ஒருதாய் பிள்ளைகள் என்றால் சரிதான். குஞ்சரம்மாள் இறந்தபின்னர் தாவா சொத்தை 1, 2 பிரதிவாதிகள் கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். பெருமாள், மாதவன் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். பிராமாண வாக்குமூலத்திற்கு வக்கீலுக்கு யார் சங்கதி சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். வக்கீலிடம் என்னை யார் அழைத்துச் சென்றது என்றால் இடம் வாங்கிய 1ம் வாதியான ஜெகநாதனின் மச்சினன் ஆவார், இங்கு அவர் நீதிமன்றத்தில் உள்ளார். மேற்படி ஜெகநாதனின் மச்சினன் என்பவர் வாதிகள் தரப்பு 1வது சாட்சியான நீலாவதியின் சகோதரர் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை நான் வாங்கிக்கொடுத்ததாக சொல்கிறேனா என்றால் ஆமாம். ஜெகநாதன் ரியல்எஸ்டேட் தொழில் செய்த காலங்களில் அவருக்கு இடம் வாங்கி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தினை 1ம் வாதி கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தில் நான் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை வாய் மொழி பாகம் பிரித்துக் கொண்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எந்த வருடம் பாகம் பிரித்தார்கள் என்றால் 2ம் பிரதிவாதி பெருமாளின் தந்தை இறந்தவுடன் 1995ம் வருடத்திற்கு மேல் பாகம் பிரித்தார்கள். நான் சொல்வது போன்று வாய்மொழி பாகம்

எதுவும் ஏற்படவில்லை என்றும், அது குறித்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாதவன் மனைவி தெரியுமா என்றால் திருமணத்தின் போது பார்த்துள்ளேன். பிரதிவாதிகளில் மாதவன், பெருமாள், ஆகியோரை தெரியும். பகவதி, பூவரசன் யார் என்று தெரியாது. பகவதி என்பவர் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றும், அவரை எனக்கு தெரியும் என்றும் மேற்படி நபரை தெரிந்து கொண்டே தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தற்போது விவசாயம் செய்துள்ளார்களா என்றால் எள் விதைத்துள்ளார்கள். தாவா சொத்தில் விவசாயம் செய்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மின்சார வசதி, போர் உள்ளதா என்றால் இல்லை. எனது நிருபணவாக்குமூலத்தில் தாவா சொத்தில் போர் போடப்பட்டு மின் இணைப்பு கொடுக்கப்பட்டதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் ஆமாம். ரியல்எஸ்டேட் தொழிலில் பழக்கமான 1ம் வாதி ஜெகநாதனுக்கு ஆதரவாக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மாதவனுக்கு பாதி பாகம் உள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.03.07 17:56:00 +0530